

# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

**06.01.2020**

## 1. 'முன்கூட்டியே நேசிக்கும்' இயேசுவின் அன்பு!

'எதைக்காட்டிலும்' இயேசுவின் மீதே அன்பின் தியானம் கொண்ட *பேதுரு* போன்ற சீஷர்களுக்கு கிடைத்திடும் அரிய பாக்கியம், "ஆண்டவரே, நீர் 'என்னுடைய' எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்" என்ற விசுவாசமேயாகும்! (யோவான் 21:17).

ஆம், பேதுருவின் மறுதலிப்பை, ஆண்டவர் முன்கூட்டியே அறிந்திருந்தார்! அவனது மனந்திரும்புதலையும்.... குணப்படுவதையும் அறிந்திருந்தார்! (லூக்.22:31-34). இப்போதும், இராமுழுவதும் கடலில் பிரயாசப்பட்டு.... *பேதுரு* பசியாய் இருந்ததையும் அவர் அறிந்திருந்தார்! தன் பசிபோக்க 'முன்கூட்டியே' இயேசு சுடச்சுட சமைத்த அப்பத்தையும் மீனையும் கண்டு அந்த அன்பில் வியப்படைந்தார்! (யோவான்.21:9). அவரது 'முன்கூட்டிய அன்பைக்' கண்டு.... அவரைத் தொழுது கொண்டான். "என் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்!" என சீஷர்கள் பெற்ற இந்த அறிவே, 2020-ம் ஆண்டு முழுவதும் நம்மை தேவனுக்குள் பாதுகாப்பாய் வைத்திட வலிமை கொண்டது!

– ரத்னம்